# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
பேரூர் மற்றும் சிங்காநல்லூர்
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 6785 / 2009 / எம்சி. 8 நாள் : 3 .7.2009

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற அவசரக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 6.07.2009 திங்கள் கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

03/07/09
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

**மாமன்ற அவசரக் கூட்டம்**
**ஜுலை 2009**

**நிகழ்ச்சி நிரல்**

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| **1** | கிழக்கு மண்டலம் - புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் - சர்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு உரிமக்காலம் நீடித்து வழங்குதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| **2** | நகரமைப்புப் பிரிவு - பயணிகள் நிழற்குடை அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| **3** | **Jnnurm** – பாதாள சாக்கடைத் திட்டம் - கழிவுநீர் சுத்திகரிப்பு குழாய்கள் மற்றும் கான்கிரீட் சோதனை குழாய்கள் அமைக்கும் பணி ரூ. 2.25 கோடி மதிப்பீடு – நகராட்சி நிர்வாக இயக்குநர் நிர்வாக அனுமதி பெறுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| **4** | பொறியியல் பிரிவு - பாதாள சாக்கடை திட்டம் - இணைப்புக் கட்டணம் மாற்றியமைத்தல் - துணை விதிகள் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. (இணைப்பு - 1) |

நன்றியுரை

**அ) திருக்குறள்**

**எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே**
**செய்தற் கரிய செயல்.**

**(குறள் -489)**

**விளக்கம்**

**கிடைப்பதற்கு அரிய காலம் வாய்க்கும் போது அதைப் பயன்படுத்திக் கொண்டு அப்போதே செயற்கரிய செய்து முடிக்க வேண்டும்.**

**திருவள்ளுவர்.**

---

**ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

கடந்த 22.06.2009 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

பொருள் : உரிமம் - கோயமுத்தூா் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்-புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம்- சா்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு மாதாந்திர உரிமக் கட்டணம் அடிப்படையில் ஒப்படை செய்யப்பட்டது - உரிமக்காலம் 25.07.2009 உடன் முடிவடையவுள்ளது - உரிமக் கட்டணம் உயா்வு செய்து – உரிமக் காலம் நீடித்து வழங்குவது-தொடா்பாக.

-----------

கோயமுத்தூா் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபம் மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.20,000/- அடிப்படையில் 26.07.2006 முதல் 25.07.2009 முடிய மூன்றாண்டுகளுக்கு சா்வே ஆப் இந்தியா அலுவலகத்திற்கு ஒப்படை செய்யப்பட்டதன் உரிமக் காலம் 25.07.2009 உடன் முடிவடைய உள்ளது.

சா்வே ஆப் இந்தியா அலுவலக இயக்குநா் தமது கடித எண்.187/(13ஏ) நாள் 27.02.2009-ன் மூலம் ஏல ஒப்பந்தத்தின்படி மேலும் மூன்றாண்டுகளுக்கு அலுவலகம் செயல்பட உரிமம் புதுப்பித்து வழங்குமாறு தெரிவித்துள்ளாா்.

நகா்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக்கு புதுப்பித்தல் குறித்து அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் திருத்திய நடைமுறைகள் ஆணைகள் வெளியிட்டுள்ளது. பாரா எண்.4-ல், II-ல், நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம். மூன்றாண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு காலஅளவு முடிவடைவதின் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே புதுப்பிக்கப்படும். இவ்வாறாக 9 ஆண்டுகள் வரையில் புதுப்பிக்கப்படும். மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைத் தொகை 15 சதவீதம் உயா்த்தப்படும். (நிபந்தனை தற்போது குத்தகையை அனுபவித்து வரும் குத்தகைதாரா்களுக்கும் பொருந்தும்)

மேலும் பாரா எண்.4-ல், IV-ல் குத்தகைதாரா்கள் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்க 1000 சதுரடிக்கு மேல் ரூ. 2000 கட்டணம் செலுத்த வேண்டும்.

அதன்படி புலியகுளம் மாநகராட்சி திருமண மண்டபத்தில் செயல்பட்டு வரும் சா்வே ஆப் இந்தியா அலுவலகம் மத்திய அரசு அலுவலகமாதலால், அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் (ந.நி.4) துறை நாள் 3.7.2007-ல் தெரிவித்துள்ளபடி, தற்போது செலுத்தப்பட்டு வரும் மாதாந்திர உரிமக் கட்டணத் தொகை ரூ.20,000/- ஐ 15 சதவீதம் உயா்வு செய்து, மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.23,000/- ஆக நிா்ணயம் செய்து 26.07.2009 முதல் 25.07.2012 வரையிலான மூன்றாண்டு காலத்திற்கு உரிம நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதி வழங்கலாம். ந.க.எண்.8146/ 2009/ கிஎ7

### மாநகர மன்ற தீா்மானம் எண்: 52 நாள்: 6.7.2009

பொருள் ஒத்திவைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

கடந்த 22.06.2009 அன்று நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள் மீண்டும் மாமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்படுகிறது.

கோயம்புத்தூா் மாநகரில் பேருந்துகள் செல்லும் சாலைகளின் பல பகுதிகளில், பயணிகள் நிழற்குடைகள் அமைக்க, பல தனியாா் நிறுவனங்களுக்கு மாநகராட்சியால் அனுமதி வழங்கப்பட்டதில் பல நிறுவனங்கள் பேருந்து நிழற்குடைகள் அமைத்துள்ளனா். கடந்த வருடம் அனுமதியற்ற விளம்பரங்களை அகற்றியதாலும் மற்றும் விளம்பரங்கள் செய்வது குறித்து அனுமதி வழங்கப்படாததாலும் பல நிறுவனங்கள் பயணிகள் நிழற்குடைகள் பராமரிக்கும் பணியினை நிறுத்திவிட்டனா்.

தற்பொழுது, கோயம்புத்தூா் மாவட்ட ஆட்சித் தலைவா் அவா்கள் தனது ந.க.எண். 20954/08/இ3 நாள் 10.03.2009-ம் தேதிய செயல்முறை ஆணையில் கடந்த 09.09.2008 ம் தேதியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு குழு கூட்டத்தில் கோயம்புத்தூா் மாநகர காவல் ஆணையா் அவா்கள், மாநகரப் பகுதிகளில் ஒளிரும் பேருந்து நிழற்குடைகள் அமைக்கப்பட வேண்டும் எனவும் மேலும் இப்பணியினை தனியாா் நிறுவனங்கள் மூலம் செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளதை சாலை பாதுகாப்புக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

அதனடிப்படையில், கோவை மாநகரில் பயணிகள் நிழற்குடை இல்லாத இடங்களில் ஒப்பந்தப்புள்ளி அல்லது EOI (Expression of Interest) மூலம் நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பயணிகள் நிழற்குடை அமைக்க அனுமதி வழங்க மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 5541/09/எம்.எச். 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண்: 53 நாள்: 6.7.2009</u>**

பொருள் ஒத்தி வைக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 3

ஜவஹா்லால் நேரு தேசிய நகா்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டத்தின் பகுதி பணியான உக்கடம் பகுதியில் 70 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட கழிவு நீா் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி ரூ.55.00 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணியில் 75% கட்டுமான பணிகள் முடிவுற்று இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. சுத்திகரிப்பு நிலையத்தின் அனைத்து பணிகளும் ஆகஸ்டு மாதத்தின் இறுதியில் முடிவுற்று செயலாக்கத்திற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோவை மாநகராட்சியின் மொத்தமுள்ள எட்டு மண்டலங்களில், நான்கு (4) மண்டலங்களிலிருந்து பெறப்படும் கழிவு நீரை இச்சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்ல வடிவமைக்கப்பட்டுள்ள கழிவு நீா் சேகரிப்பு குழாய்கள் பதிக்கும் பணிக்கு மூன்றாம் அழைப்பாக கடந்த 29.04.2009 – ல் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஒப்பந்தப் புள்ளிகளை இறுதி செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணி துவங்கி முழுமையாக முடிவுற குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுகளாகும்.

இந்நிலையில் இம்மாநகராட்சி தற்போது செயல்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு சுமாா் 20 எம்.எல்.டி அளவிற்கு கழிவு நீா் பெறப்பட்டு, தற்போது உள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் இருந்து வெள்ளலூா் கழிவுநீா் குட்டைக்கு பம்பிங் செய்யப்படுவதுடன் கூடுதலாக பெறப்படும் கழிவுநீா் திறந்தவெளி வடிகால் மூலம் விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. பாதாள சாக்கடை திட்ட கழிவு நீா் சேகரிப்பு குழாய்கள் பதிக்கும் பணியில் (சிப்பம்- 1) பழைய கழிவு நீரேற்று நிலையம் வரையில் மட்டும் அமைக்க வழிவகை செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளதால், கழிவு நீா் சேகரிப்பு குழாயினை கட்டப்பட்டு வரும் கழிவு நீா் சுத்திகரிப்பு நிலையம் வரையிலான சுமாா் 1500 மீட்டா் நீளத்திற்கு கழிவு நீா் சேகரிப்பு குழாய் பதித்தல் பணி மேற்கொண்டால் மட்டுமே நான்கு மண்டலங்களிலிருந்து பெறப்படும் கழிவு நீரை சுத்திகரிப்பு நிலையம் வரை கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்ய இயலும்.

எனவே 1500 மீட்டா் நீளத்திற்கு கழிவு நீா் சேகரிப்பு குழாய்கள் அமைக்கும் பணிக்கும், 30 மீட்டா் இடைவெளியில் அமைக்கப்பட வேண்டிய 2.5 மீட்டா் விட்டமுள்ள கான்கீரீட் சோதனை குழிகள் தேவையான எண்ணிக்கைக்கு அமைக்கும் பணிக்கு ரூ.2.25 கோடி மதிப்பில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிா்வாக இயக்குநா் அவா்களின் நிா்வாக அனுமதி பெறவும், இப்பணியினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு.</u>

1. உக்கடம் பழைய கழிவு நீா் சுத்திகாிப்பு நிலையத்திற்கு வரும் சேகாிப்பு குழாய் இணைப்பிலிருந்து புதிய சுத்திகாிப்பு நிலையம் வரையில் 1500 மீட்டா் நீளத்திற்கு கழிவு நீா் சேகாிப்பு குழாய்கள் மற்றும் கான்கிாீட் சோதனை குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ.2.25 கோடி மதிப்பில் தயாாிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு நகராட்சி நிா்வாக இயக்குநா், சென்னை அவா்களின் நிா்வாக அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2. இப்பணிக்கான செலவினம் ரூ.2.25 கோடியினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க. எண். 5925/2009/ஜே.எண். 4

<u>மாநகர மன்ற தீா்மானம் எண்: 54 நாள்: 6.7.2009</u>

1 உக்கடம் பழைய கழிவுநீா் சுத்திகாிப்பு நிலையத்திற்கு வரும் சேகாிப்பு குழாய் இணைப்புகளிலிருந்து புதிய சுத்திகாிப்பு நிலையம் வரையில் 1500 மீட்டா் நீளத்திற்கு கழிவு நீா் சேகாிப்பு குழாய்கள் மற்றும் கான்கிாீட் சோதனை குழாய்கள் அமைக்கும் பணிக்கு ரூ. 2.25 கோடி மதிப்பில் தயாாிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு, நகராட்சி நிா்வாக இயக்குநா், சென்னை அவா்களின் நிா்வாக அனுமதிபெற்று பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

2. இப்பணிக்கான செலவினம் ரூ 2.25 கோடியினை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 4

பொருள் : கோயம்புத்தூா் மாநகராட்சியில் ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ377.13 கோடியில் செயல்படுத்தப்படவுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத்திட்ட செயலாக்கம் - பொது மக்களிடமிருந்து பராமாிப்புக் கட்டணம், இணைப்பு கட்டணம் மாற்றியமைத்து வசூலித்தல் - பாதாள சாக்கடைத் திட்ட செயலாக்க துணை விதிகள் - வாிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது – மாமன்ற அனுமதி வேண்டுதல் - தொடா்பு.

கோயம்புத்தூா் மாநகராட்சி மாமன்றம் தமது தீா்மான எண்.141 நாள் 01.06.1998ம் தேதிய தீா்மானத்தின்படி மாநகராட்சி பகுதிக்குள் இயங்கி வரும் பாதாள சாக்கடை இணைப்புகளுக்கு இணைப்புக் கட்டணம் மற்றும் மாதாந்திர சேவைக்கட்டணம் பயனீட்டாளா்களிடமிருந்து கீழ்க்கண்டவாறு வசூலிக்கவும் மேற்படி கட்டண விகிதங்கள் 01.07.1998 முதல் நடைமுறைப்படுத்தவும் அனுமதி அளிக்கப்பட்டது.

| சொத்துவரி அடிப்படையில் நிர்ணயம் | வருடாந்திர சேவைக் கட்டணம் | | இணைப்பு கட்டணம் | |
|---|---|---|---|---|
| | குடியிருப்பு | குடியிருப்பு அல்லாதது | வீட்டிற்குரிய கட்டணம் | வர்த்தக ஸ்தாபனம்/ அடுக்குமாடி கட்டிடம்/ தொழிற்சாலை/ மருத்துவமனைகள் மற்றும்இதர நிறுவனங்கள் |
| ரூ 300.00 | 200 | 500 | 1250 | 2400 |
| ரூ300-1000 | 1450 | 3200 | 4500 | 10000 |
| ரூ1100-5000 | 4700 | 8500 | 9000 | 17500 |
| ரூ5000 | 7750 | 16500 | 14500 | 24000 |
| வருடாந்திர கட்டணம் | 2044 | 4063 | 4968 | 10180 |

மேற்படி கட்டண விகிதங்களின்படி பாதாள சாக்கடை இணைப்பு வழங்கவும், மாதாந்திர சேவை கட்டண விகிதங்களை கோவை மாநகராட்சி பொது மக்களிடமிருந்து வசூலிக்க பாதாள சாக்கடை திட்ட துணைவிதிகள் உருவாக்கப்படாததால், திருத்தப்பட்ட கட்டணங்களை முழுமையாக செயல்படுத்த இயலவில்லை.

இந்நிலையில், கோவை மாநகராட்சியில் இயக்கத்தில் உள்ள பாதாள சாக்கடை திட்டத்தினை புனரமைப்பு செய்யவும், விடுபட்டுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தினை செயல்படுத்தவும் மாமன்றம் தனது 24.09.2007ம் தேதிய தீர்மானம் 117ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளவும், மத்திய மாநில அரசின் பங்களிப்பு 70 சதவீதம் போக மீதமுள்ள 30 சதவீத தொகையினை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்திடமிருந்து கடனாகப்பெற்று செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளதின் பேரில் அரசு ஆணை (3டி) எண்,25 நி.நி.ம.கு.வ. (நிதி 3) துறை 24.10.2007ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.274 நாள் 27-03-2008 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணையில், இத்திட்டத்தில் செலவழிக்க பெறப்படும் கடன் தொகையினை ஈடு கட்ட இணைப்பு வழங்கப்பட்டுள்ள மற்றும் இணைப்பு வழங்கப்படவுள்ள பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய மாதாந்திர பராமரிப்புக் கட்டணம் மற்றும் இணைப்புக் கட்டண விகிதங்கள் கீழ்க்கண்டவாறு வசூலிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| மாதாந்திர பராமரிப்பு கட்டணம் (ரூபாயில்) | | இணைப்பு கட்டணம் (ரூபாயில்) | |
|---|---|---|---|
| வீட்டு உபயோகம் | வீட்டு உபயோகம் அல்லாத | வீட்டு உபயோகம் | வீட்டு உபயோகம் அல்லாத |
| 170/- | 339/- | 4968/- | 10180/- |

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் (XXV/1981) , பிரிவு எண்.196 முதல் 438ன் படி பாதாள சாக்கடைத்திட்டம் செயல்படுத்துவதற்கான துணை விதிகள் (By-Laws) தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த துணைவிதிகளின்படி கோவை மாநகராட்சியின் எல்லைக்குள் இருக்கும் குடியிருப்பு. அடுக்குமாடி கட்டிடங்கள், தங்கும் விடுதி மற்றும் வியாபார நிறுவனங்களிடமிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுகள் வெளியேற்றுவதற்கான உபகரணங்கள் அமைத்தல், அதற்கான பாதாள சாக்கடை குழாய் இணைப்பு வழங்குதல், வீட்டு உபயோகம் /வீட்டு உபயோகம் அல்லாத முறையில் வழங்குதல் ஆகியவற்றிற்கு பயனீட்டாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர சேவைக் கட்டணம் கணக்கிடப்பட்டு வசூலிக்க வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தமது தீர்மானம் எண்.56 நாள் 16-06-2008-ல் கீழ்க்கண்டவாறு (வைப்புத்தொகை) திருத்தம் செய்து ஒப்புதல் வழங்கியுள்ளது.

**அட்டவணை-I**

| வ.எண் | இணைப்பு தன்மை விவரம் | வைப்புத் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | <u>வீட்டு உபயோகம்</u><br>கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வைப்புத் தொகை மற்றும் மேற்பார்வைக் கட்டணமாக செலுத்த வேண்டிய தொகை (வைப்புத்தொகை ரூ 3,000.00 + மேற்பார்வைக்கட்டணம் ரூ1,000.00) | 3,000.00 |
| 2. | <u>வீட்டு உபயோகம் அல்லாத தொழிற்சாலைகள் / வணிக நிறுவனங்கள் / சிறு ஹோட்டல்கள் / மருத்துவமனைகள்</u><br>கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வைப்புத் தொகையாகவும், மேற்பார்வைக் கட்டணமாகவும் செலுத்த வேண்டிய தொகை (வைப்புத்தொகை<br>ரூ 20,000.00 + மேற்பார்வைக்கட்டணம் ரூ1,000.00) | 20,000.00 |
| 3. | <u>நட்சத்திர உணவகம், நட்சத்திர உணவகத்திற்கு நிகரான பெரிய உணவகங்கள்</u><br>கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு வைப்புத் தொகையாகவும், மேற்பார்வைக் கட்டணமாகவும் செலுத்த வேணடிய தொகை (வைப்புத்தொகை<br>ரூ 25,000.00 + மேற்பார்வைக்கட்டணம் ரூ1,000.00) | 25,000.00 |

| மாதாந்திர சேவைக்கட்டண விவரம் | | |
|---|---|---|
| 1. | குடியிருப்பு வீடு (Residential House)<br>அதாவது ஒரு வீட்டிற்கு<br>2 முதல் 5 வீடுகள் வரை<br>6 முதல்10 வீடுகள் வரை<br>10க்கு மேல் உள்ள வீடுகளுக்கு | <br>150.00<br>200.00<br>250.00<br>350.00 |
| 2. | வணிக வளாகங்கள் (Commercial Complex)<br>1 முதல் 3 கடைகளுக்கு<br>4 முதல்10 கடைகளுக்கு<br>10 கடைகளுக்கு மேல் | <br>300.00<br>350.00<br>450.00 |
| 3. | தொழிற்சாலைகள் (Industries)<br>10 பேர் வரை வேலை செய்யும் இடத்திற்கு<br>11 பேர் முதல் 50 பேர் வரை வேலை செய்யும் இடத்திற்கு<br>51 பேர் முதல் 100 பேர் வரை வேலை செய்யும் இடத்திற்கு<br>100 பேருக்கு மேல் வேலை செய்யும் இடத்திற்கு | <br>350.00<br>400.00<br>500.00<br>600.00 |

| | | |
|---|---|---|
| 4. | மருத்துவமனைகள் (Hospital)<br>1 முதல் 10 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு<br>11 முதல் 25 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு<br>25 க்கு மேல் உள்ள படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | <br>300.00<br>400.00<br>500.00 |
| 5. | தங்கும் விடுதிகள் (Hostel, Lodge)<br>1 முதல் 10 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு<br>11 முதல் 25 படுக்கை வசதி கொண்டவைகளுக்கு<br>25 க்கு மேல் உள்ள படுக்கை வசதி கொண்டவைகளுக்கு | <br>400.00<br>500.00<br>600.00 |
| 6. | உணவு விடுதிகள் (Restaurant)<br>நடுத்தரம் வரை<br>நட்சத்திர உணவகத்திற்கு நிகரான பெரிய உணவகங்கள் மற்றும் 3 நட்சத்திர உணவகங்களுக்கு<br>மூன்று நட்சத்திர உணவகங்களுக்கு மேல் உள்ளவைகளுக்கு | <br>400.00<br>1,500.00<br>2,500.00 |

இப்பொருள் குறித்து மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமா்ப்பிக்கப்பட்டதில், “மாமன்றம் தமது மா.ந.ம.தீ.எண்.30 நாள் 22-06-2009-ல் மாமன்ற அனைத்து கட்சிக்குழு தலைவா்கள் கூட்டத்தில் விவாதித்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீா்மானிக்கப்பட்டது” என தீா்மானம் நிறைவேற்றியுள்ளது.

அதன்படி, வணக்கத்திற்குரிய மேயா் தலைமையில் மாநகராட்சி ஆணையா், அனைத்து கட்சிக் குழு தலைவா்கள் மற்றும் அதிகாரிகள், 30-06-2009 அன்று மாநகராட்சி கூட்ட அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில், பாதாள சாக்கடை கட்டண விகிதம் நிா்ணயம் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது. மேற்படி, கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு மாதாந்திர சேவை கட்டணம் மற்றும் வைப்புத்தொகை வசூலிக்க முடிவு செய்யப்பட்டது.

அட்டவணை-II

<u>மாதாந்திர சேவைக் கட்டணம் :-</u>

| வ.என | கட்டிடத்தின் வகை | இணைப்பு ஒன்றிற்கு மாதாந்திர சேவை கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | <u>குடியிருப்பு வீடு (Residential House) மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் (Apartments) உள்ள ஒவ்வொரு குடியிருப்புகள்</u><br>500 சதுர அடிக்கு குறைவானவை<br>500 சதுர அடிக்கு மேல் 1200 சதுரடி வரை உள்ளவை<br>1200 சதுர அடிக்கு மேல் 2400 சதுரடி வரை உள்ளவை<br>2400 சதுர அடிக்கு மேல் உள்ளவை | <br>30.00<br>50.00<br>75.00<br>150.00 |

| | | |
|---|---|---|
| 2 | <u>வணிக வளாகங்கள் கட்டிடத்தின் பரப்பளவு (Commerical Complexes)</u> | |
| | 500 சதுர அடிக்கு குறைவானவை | 75.00 |
| | 500 சதுர அடிக்கு மேல் 1200 சதுரடி வரை உள்ளவை | 150.00 |
| | 1200 சதுர அடிக்கு மேல் 2400 சதுரடி வரை உள்ளவை | 200.00 |
| | 2400 சதுர அடிக்கு மேல் 7500 சதுரடி வரை உள்ளவை | 350.00 |
| | 7500 சதுர அடிக்கு மேல் 10000 சதுரடி வரை உள்ளவை | 700.00 |
| | 10000 சதுர அடிக்கு மேல் உள்ளவை | 1000.00 |
| 3 | <u>தொழிற்சாலைகள் (Industries)</u> | |
| | 500 சதுர அடிக்கு குறைவானவை | 75.00 |
| | 500 சதுர அடிக்கு மேல் 1200 சதுரடி வரை உள்ளவை | 150.00 |
| | 1200 சதுர அடிக்கு மேல் 2400 சதுரடி வரை உள்ளவை | 200.00 |
| | 2400 சதுர அடிக்கு மேல் 5000 சதுரடி வரை உள்ளவை | 350.00 |
| | 5000 சதுர அடிக்கு மேல் உள்ளவை | 500.00 |
| 4 | <u>மருத்துவமனைகள் (Hospital)</u> | |
| | 1 முதல் 10 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகள் | 500.00 |
| | 11 முதல் 25 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகள் | 750.00 |
| | 25 க்கு மேல் 100 வரை படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகள் | 1000.00 |
| | 100 க்கு மேல் 250 வரை படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகள் | 2500.00 |
| | 250க்கு மேல் படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகள் | 5000.00 |
| 5 | <u>தங்கும் விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் (Hostel/ Lodge)</u> | |
| | 1 முதல் 10 படுக்கை வசதி கொண்ட தங்கும் விடுதி ஒன்றிற்கு | 500.00 |
| | 11 முதல் 25 படுக்கை வசதி கொண்ட தங்கும் விடுதி ஒன்றிற்கு | 1000.00 |
| | 25 க்கு மேல் உள்ள படுக்கை வசதி கொண்ட தங்கும் விடுதிகளுக்கு | 1500.00 |
| | மூன்று நட்சத்திர அந்தஸ்து மற்றும் அதற்கும் மேற்பட்ட தங்கும் விடுதிகளுக்கு | 2500.00 |
| 6 | <u>உணவகங்கள் மற்றும் உணவு விடுதிகள்(Restaurant & Hotels)</u> | |
| | <u>சிறிய உணவு விடுதிகள்</u><br>(300 சதுரடி வரை உள்ள உணவருந்தும் இடம்) | 150.00 |
| | <u>நடுத்தர உணவு விடுதிகள்</u><br>(300 சதுரடி முதல் 750 சதுரடி வரை உள்ள உணவருந்தும் இடம்) | 300.00 |
| | பெரிய உணவு விடுதிகள் | 1000.00 |
| | (a) 750 சதுரடி முதல் 1500 சதுரடி வரை உள்ள உணவருந்தும் இடமுள்ள உணவு விடுதிகள் | |
| | (b) 1500 சதுரடி முதல் 2500 சதுரடி வரை உள்ள உணவருந்தும் இடமுள்ள உணவு விடுதிகள் | 1500.00 |
| | மூன்று நட்சத்திரத்திற்கும் மேற்பட்ட உணவகங்கள் மற்றும் அதற்கு நிகரான பெரிய உணவகங்கள் | 2500.00 |
| | ஐந்து நட்சத்திர அந்தஸ்து உள்ள உணவகங்கள் மற்றும் அதற்கும் மேற்பட்ட உணவகங்கள் ஒன்றிற்கு | 5000.00 |
| 7 | <u>திரையரங்குகள் ( Cinema Theatre)</u> | |
| | 1000 எண்ணிக்கை வரை இருக்கை வசதி உள்ள திரையரங்கு ஒன்றிற்கு | 350.00 |
| | 1000 எண்ணிக்கைக்கு மேல் இருக்கை வசதி உள்ள திரையரங்குகள் ஒன்றிற்கு | 1000.00 |

| | | |
|---|---|---|
| 8 | <u>கல்யாண மண்டபம் (Kalyana Mandapam) மற்றும் சமுதாயக்கூடங்கள் Community Hall)</u><br>2500 சதுரடி வரை உள்ளவை<br>2500 சதுர அடிக்கு மேல் 4000 சதுரடி வரை உள்ளவை<br>4000 சதுரடிக்கு மேல் உள்ளவை | <br><br>200.00<br>500.00<br>1000.00 |
| 9 | <u>பள்ளிகள் மற்றும் கல்லூாிகள் (Schools & Colleges)</u><br>ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி ஒன்றிற்கு<br>உயா்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி ஒன்றிற்கு<br>கல்லூாி ஒன்றிற்கு | <br>500.00<br>1000.00<br>3000.00 |
| 10 | நவீன கட்டண கழிப்பிடங்கள் | 500.00 |
| 11 | <u>குடியிருப்பு அல்லாத அனைத்து வகையான பிற பயன்பாட்டுக் கட்டிடங்கள்</u> | |
| | 500 சதுர அடிக்கும் குறைவானவை | 75.00 |
| | 500 சதுர அடிக்கு மேல் 1200 சதுர அடி வரை உள்ளவை | 150.00 |
| | 1200 சதுர அடிக்கு மேல் 2400 சதுர அடி வரை உள்ளவை | 200.00 |
| | 2400 சதுரடிக்கு மேல் உள்ளவை | 350.00 |

<u>12.வைப்புத்தொகை :-</u>

பாதாள சாக்கடை இணைப்பு கோரும் கட்டிடம் முழுமைக்குமான அரையாண்டு சொத்துவரி தொகை அல்லது ரூ 3,000/-(ரூபாய் மூவாயிரம் மட்டும்) இவ்விரண்டில் எது அதிகமோ அத்தொகை வைப்புத்தொகையாக வசூலிக்கப்படும்.

மாதாந்திர சேவைக் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை அவ்வப்போது திருத்தியமைத்து மறு நிா்ணயம் செய்து கொள்ளப்படும்

எனவே, அட்டவணை II-ல் உள்ளவாறு மாதாந்திர சேவைக் கட்டணம் நிா்ணயம் செய்யவும், பாதாள சாக்கடை திட்ட துணை விதிகளுக்கு ஒப்புதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :-</u>

(அ) ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புற புனரமைப்புத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளில் ஒன்றான ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டம் ரூ 377.13 கோடி செலவில் செயல்படுத்த மத்திய மற்றும் மாநில அரசு வழங்கும் மொத்த மதிப்பீட்டில் 70 சதவீதம் மானிய தொகை போக மீதமுள்ள 30 சதவீதம் மாநகராட்சி பங்கு தொகையினை கடனாகவோ அல்லது மாநகராட்சி பொது நிதியிலிருந்தோ செலவழித்து திட்டத்தினை நிறைவேற்ற இணைப்பு தாரா்களிடமிருந்து திருத்தியமைக்கப்பட்ட மாதாந்திர சேவை கட்டணம் மற்றும் இணைப்பு கட்டணம் வசூலித்தல் தவிா்க்க இயலாது. மேலும், ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புற புனரமைப்பு திட்டத்தில் சொல்லப்பட்டுள்ள கட்டாய சீா்திருத்தங்கள் (Mandatory Reforms) மாமன்றம் தனது தீா்மானம் எண்.233 நாள் 22-01-2008 அமுல்படுத்த ஒப்புதல் அளித்து உள்ளது. அதன்படி, பயனாளிகளிடமிருந்து சேவை கட்டணத்தினை பராமாிப்பு செலவுகளை ஈடு செய்யும் வகையில் வசூலிக்கப்படல் வேண்டும்.

(ஆ) பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக புதிதாக உருவாக்கப்பட்ட துணைவிதிகளின்படி திருத்தி அமைக்கப்பட்ட மாதாந்திர சேவைக் கட்டணம் அட்டவணை II-ல் உள்ளவாறு, இணைப்புக் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை பாதாள சாக்கடை இணைப்பு கோரும் கட்டிடம் முழுமைக்குமான அரையாண்டு சொத்துவரி தொகை அல்லது ரூ 3,000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) இவ்விரண்டில் எது அதிகமோ அத்தொகை வைப்புத்தொகையாக வசூலிக்க நிா்ணயிக்கப்பட்டுள்ளது. அனைத்து வகை பயனாளிகளிடமிருந்து மாநகராட்சியிலுள்ள பழைய மற்றும் புதிய இணைப்பு பெறும் பயனாளிகளிடமிருந்து வசூலிக்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(இ) பாதாள சாக்கடை திட்ட துணை விதிகளை நகராட்சி நிா்வாக இயக்குநரக முதன்மைப் பொறியாளா் அவா்களுக்கு அனுப்பி ஒப்புதல் பெறலாம்.

(ஈ) பாதாள சாக்கடை கட்டண விவரங்கள் மற்றும் துணை விதிகள் பற்றிய பொது மக்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் (கருத்து) பெறவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(உ)மாதாந்திர சேவைக் கட்டணம் மற்றும் வைப்புத்தொகையினை அவ்வப்போது திருத்தியமைத்து மறு நிா்ணயம் செய்யவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

(ஊ)பாதாள சாக்கடை இணைப்பு பெறாத அனைத்து பயனாளிகளிடமிருந்து பாதாள சாக்கடை இணைப்பு பெற வற்புறுத்துதல்.

(எ) மேற்கண்ட 'அ' முதல் 'ஊ' வரை உள்ள குறிப்புகளின் அடிப்படையில் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.12069/2006/ப.வ.(எம்)

மாநகர மன்ற தீர்மானம் எண்: 55 நாள்: 6.7.2009

1. பொருளில் அட்டவணை II மற்றும் பாதாள சாக்கடை துணை விதிகள் அட்டவணை I ல் மாதாந்திர சேவைக்கட்டணமாக வரிசை எண். 1ல் குடியிருப்பு வீடு மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் உள்ள ஒவ்வொரு குடியிருப்புக்கும் 2400 சதுர அடிக்கு மேல் 4000 சதுரடி வரை ரூ.150/- எனவும், 4000 சதுர அடிக்கு மேல் ரூ. 200/- எனவும், வரிசை எண் 2 ல் (வணிக வளாகங்கள்) 10,000 சதுர அடிக்கு மேல் 25,000 சதுர அடி வரை ரூ.1000/- எனவும், 25,000 சதுர அடிக்கு மேல் ஒவ்வொரு 5000 சதுர அடிக்கும் ரூ 100/- கூடுதல் கட்டணமாகவும், வரிசை எண். 4 மருத்துவமனைகள் என்பதனை மருத்துவ மனைகள் மற்றும் கிளினிக்குகள் எனவும், குறைந்த பட்ச கட்டணம் மற்றும் 10 படுக்கைகள் வரையுள்ள மருத்துவ மனைகளுக்கு ரூ.500 எனவும், வரிசை எண். 5 தங்கும் விடுதிகள் மற்றும் தங்குமிடங்கள் என்பதனை தங்கும் விடுதிகள் எனவும்,

| தங்குமிடங்களுக்கான மாதாந்திர சேவைக்கட்டணம் (Hostel) | |
|---|---|
| 500 சதுர அடிக்கு குறைவானவை | ரூ. 60/- |
| 500 சதுர அடிக்கு மேல் 1200 சதுர அடி வரை | ரூ. 100/- |
| 1200 சதுர அடிக்கு மேல் 2400 சதுர அடி வரை | ரூ. 150/- |
| 2400 சதுர அடிக்கு மேல் 4000 சதுர அடி வரை | ரூ. 300/- |
| 4000 சதுர அடிக்கு மேல் | ரூ. 400/- |

என நிர்ணயம் செய்யவும்,

வரிசை எண் 6 ல் 300 சதுரடி வரை உணவருந்தும் இடம் உள்ள சிறிய உணவு விடுதிகள் ரூ.100.00 எனவும், 300 சதுர அடிக்கு மேல் 750 சதுர அடி வரையுள்ள நடுத்தர உணவு விடுதிகள் ரூ. 200 எனவும், வரிசைஎண். 11 குடியிருப்பு அல்லாத அனைத்து வகையான பிற பயன்பாட்டுக் கட்டிடங்கள் என்பதனை குடியிருப்பு அல்லாத கலப்பு குடியிருப்பு மற்றும் வரிசை எண். 2 முதல் 10 வரையுள்ள கட்டிடங்கள் தவிர அனைத்து வகையான பிற பயன்பாட்டுக் கட்டிடங்கள் எனவும் திருத்தம் செய்தும், 7500 சதுர அடிக்கு மேல் 10000 சதுர அடிவரை ரூ. 700 எனவும், 10000 சதுர அடிக்கு மேல் 25000 சதுர அடிவரை ரூ. 1000 எனவும், 25000 சதுர அடிக்கு மேல் ஒவ்வொரு 5000 சதுர அடிக்கும் கூடுதலாக ரூ. 100 எனவும் நிர்ணயம் செய்தும், பொருளில் அட்டவணை II ல் மற்றும் பாதாள சாக்கடை துணை விதிகள் அட்டவணை I ல் உள்ளவாறு பிற கட்டண விகிதங்களை நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

2. பாதாள சாக்கடை இணைப்பு ஒன்றிற்கு வைப்புத் தொகையாக 1). ரூ.3000 (ரூபாய் மூவாயிரம் மட்டும்) அல்லது 2) பாதாள சாக்கடை இணைப்பு கோரும் கட்டிடம் முழுமைக்குமான அரையாண்டு சொத்து வரித் தொகை, இவ்விரண்டில் எது அதிகமோ அத்தொகையினை வசூலிக்கலாம் எனவும், மேற்பார்வைக் கட்டணமாக ரூ.1000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிர்ணயம் செய்து வசூலிக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

3. மாதாந்திர சேவைக்கட்டணம் மற்றும் வைப்புத் தொகை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை உயர்வு செய்து கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது.

4. பாதாள சாக்கடை மாதாந்திர சேவைக்கட்டணத்தினை பொது மக்களின் வசதிக்கேற்றவாறு மாதா மாதம் அல்லது 3 மாதத்திற்கு ஒருமுறை அல்லது 6 மாதத்திற்கு ஒருமுறை என மொத்தமாக வசூல் செய்து கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டது.

5. பொருளில் துணை விதிகள் 50 (ஈ) யினை பாதாள சாக்கடை இணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் மாநகராட்சி வரிவிதிப்பு செய்யப்பட்ட சொத்து வரி புத்தகத்தின் நகல் இணைத்து அனுப்புதல் வேண்டும் என மாற்றம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

6. பொருளில் துணை விதிகள் 51 (அ) வில் ரூ.1000 வரையில் அபராதம் விதிக்கப்படும் எனவும் 51 (ஆ) வில் மாநகராட்சி அலுவலரிடமிருந்து அவ்விதம் மீறி நடக்கும் செய்கையை நிறுத்துமாறு அறிக்கை வந்த பின்பு அதை தொடர்ந்து விதிகளை மீறினால் நாளொன்றுக்கு ரூ. 250.00 வரையில் கூடுதல் அபராதத்திற்குள்ளாவார்கள் எனவும் திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

7. பொருளில் பொது விதிகள் 4 ல் அபராதம் ரூ. 2000 எனவும், பொதுவிதிகள் 16 ல் தொழிற்சாலை கழிவு நீர் பொதுக்கழிவு நீருடன் கலப்பது கூடாது எனவும் திருத்தம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

8. இந்த துணை விதிகளை மீறி நடப்பவர் யாராக இருந்தாலும் ரூ. 1000 வரையிலும் அபராதம் விதிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணை விதிகள் தொடர்ந்து மீறப்படுமேயானால் ரூ 250 தொடர் அபராதம் நாளொன்றுக்கு விதிக்கப்படுவதுடன் காவல் துறை மூலமும் சட்டப்படியும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாற்றம் செய்யலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டது

9. பாதாள சாக்கடை திட்ட துணை விதிகள் பற்றிய பொது மக்களின் ஆட்சேபனைகளை மற்றும் ஆலோசனைகள் பெற மாமன்றம் அனுமதி வழங்கவும் நகராட்சி நிர்வாக இயக்குனரக முதன்மைப் பொறியாளரின் ஒப்புதல் பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

10. வணக்கத்திற்குரிய மேயர் தலைமையில் மாமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை அமைத்து பாதாள சாக்கடை உபவிதிகள் மற்றும் சேவைக்கட்டணம் தொடர்பாக பொதுமக்களிடமிருந்து பெறப்படும் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் குறித்து முடிவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---